**கோவை, மாவட்ட நிலஅளவை பதிவேடுகள் துறை உதவி இயக்குநர் மற்றும் மாவட்ட ஆட்சியரின் நேர்முக உதவியாளர் அவர்களின் செயல்முறை ஆணைகள்**

**பிறப்பிப்பவர்: திரு. சி. சரவணன்,**

**ந.க.அ8/1228/2024** **நாள். 29.02.2024**

பொருள்: பொதுப்பணிகள் – நில அளவைப்பதிவேடுகள் துறை - கோவை மாவட்டம் - கருணை அடிப்படையில் பணி நியமனம் - காலஞ்சென்ற உதவி இயக்குநர் திருரா.முருகேசன், என்பவரின் வாரிசுதாரரும், மகனுமாகிய திரு. மு. ராஜ்குமார் என்பவருக்கு கருணையின் அடிப்படையில் தற்காலிகமாக இளநிலை உதவியாளராக நியமனம் செய்து ஆணைகள் வழங்கியது - பணியேற்ற நாள் முதல் பணிவரன் முறை செய்து உத்தரவிடுதல் – தொடர்பாக.

பார்வை:
1. திரு. மு. ராஜ்குமார், காலஞ்சென்ற - உதவி இயக்குநர் திரு. ரா. முருகேசன் என்பவருடைய மகனின் மனு நாள்: 21.04.2021.
2. சென்னை நில அளவை மற்றும் நிலவரித்திட்ட இயக்குநரது .ந.க ர1/9529/2023 நாள்: (நி.அ) நாள் 16.05.2023
3. ஈரோடு மாவட்ட நில அளவை அலுவலகம் உதவி இயக்குநரின் கடித எண் ந.க அ3/557/2023 நாள்:19.05.2023.
4. அரசாணை (நிலை) எண் 18 தொழிலாளர் மற்றும் வேலைவாய்ப்புத்துறை, நாள்.23.01.2020
5. அரசாணை (நிலை) எண் 248 நிதி (CMPC) துறை நாள் 20.05.2020
6. அரசாணை (நிலை) எண் 382 நிதி (CMPC) துறை நாள் 24.10.2020
7. அரசாணை நிலை எண். 108, வருவாய் மற்றும் பேரிடர் மேலாண்மைத் துறை, நாள். 11.03.2022.
8. அரசாணை (நிலை) எண். 33, தொழிலாளர் நலன் மற்றும் திறன் மேம்பாட்டுத் (க்யு - 1) துறை, நாள். 08.03.2023.
9. இவ்வலுவலக செயல்முறை ஆணை எண் நக எண் அ6/3835/2023 நாள்.26.06.2023.
10. திரு. மு. ராஜ்குமார் என்பவரது பணியேற்பு அறிக்கை நாள்: 26.06.2023.
11. அரசுக் கடிதம் எண். 5532/G2/2023-1, மனித வள மேலாண்மைத் (G2) துறை, நாள்.20.09.2023.
12. அரசுக் கடிதம் 1(டி) எண். 64, வருவாய் மற்றும் பேரிடர் மேலாண்மைத் துறை பணிகள் அலகு பணி- 9 (2) பிரிவு, நாள். 18.01.2024.

..........

**ஆணைகள்**

பார்வை 2 இல் காணும் நிலஅளவை மற்றும் நிலவரித்திட்ட இயக்குநர், ஈரோடு மாவட்டம், நில அளவை அலகில் உதவி இயக்குநராக பணியாற்றி பணியிடையே 29.05.2021 அன்று காலஞ்சென்ற திரு. ரா. முருகேசன் என்பவரின் மகன் திரு. மு. ராஜ்குமார் என்பவருக்கு கருணை அடிப்படையில் பணி நியமனம் வழங்க பார்வை 3 இல் காணும் கடிதம் மூலம் ஈரோடு மாவட்டம், நில அளவை பதிவேடுகள் துறை, உதவி

இயக்குநரிடமிருந்து பரிந்துறையுடன் முன்மொழிவுகள் பெறப்பட்டு பரிசீலனை செய்யப்பட்டு, காலஞ்சென்ற உதவி இயக்குநர், திரு.ரா.முருகேசன் என்பவரது வாரிசுதாரரான திரு. மு. ராஜ்குமார் என்பவருக்கு பார்வை 4, 7 மற்றும் 8 இல் காணும் ஆணைகளின் படி மற்றும் நடைமுறையில் உள்ள அரசு விதிகளை நன்கு பரிசீலித்து தகுதிக்கேட்ப தற்காலிகமாக கோவை மாவட்ட உதவி இயக்குநர் அலுவலகத்தில் இளநிலை உதவியாளர் காலி பணியிடத்தில், கருணை அடிப்படையில் இளநிலை உதவியாளராக தற்காலிகமாக பணி நியமனம் வழங்க கோவை மாவட்ட நில அளவை பதிவேடுகள் துறை, உதவி இயக்குநருக்கு வழங்கப்பட்டது. அதன் அடிப்படையில், பார்வை -9 ல் காணும் கோயம்புத்தூர், மாவட்ட நில அளவை பதிவேடுகள் துறை, உதவி இயக்குநரின் செயல்முறை ஆணையின்படி, கருணை அடிப்படையில் இளநிலை உதவியாளராக தற்காலிக பணிநியமனம் செய்யப்பட்ட திரு. மு. ராஜ்குமார் என்பவர் இளநிலை உதவியாளர் பதவியில் பணியில் சேர்ந்த நாளான 26.06.2023 முற்பகல் முதல் பணியேற்பு அறிக்கையின் படி இவ்வலுவலக கட்டுப்பாட்டில் 26.06.2023 முற்பகல் முதல் இளநிலை உதவியாளராக பணியேற்று பணிபுரிந்து வரும் திரு. மு. ராஜ்குமார் என்பவருக்கு பார்வை 8 இல் காணும் அரசாணை பார்வை 11 மற்றும் 12 ஆகிய அரசு கடிதங்களில் உள்ள வழிகாட்டுதல்கள் ஆகியவற்றின்படி, (" The Services of the Government Servants who are appointed or yet to be appointed, on Compassionate Grounds, shall be Regularized as per Tamil Nadu Civil Services (Appointment on Compassionate Grounds) Rule 2023.") தனியர் இளநிலை உதவியாளராக பணியேற்ற நாளான 26.06.2023 முற்பகல் முதல் தனியரது பணியினை இளநிலை உதவியாளர் இனத்தில் பணிவரன்முறை செய்து இதன் மூலம் உத்தரவிடப்படுகிறது. மேலும் இவர் மூன்று ஆண்டுகள் பணிக்காலத்திற்குள் இரண்டு ஆண்டுகள் தகுதிகாண்பருவம் நிறைவு செய்ய வேண்டும் எனவும் உத்தரவிடப்படுகிறது.

சி. சரவணன்
29/2/24

உதவி இயக்குநர்

நில அளவை பதிவேடுகள் துறை

கோயம்புத்தூர்

29/2/24

பெறுநர்

திரு. மு. ராஜ்குமார்,

இளநிலை உதவியாளர்,

மாவட்ட நிலஅளவை அலுவலகம்,

கோயம்புத்தூர். (கண்காணிப்பாளர் மூலமாக)

நகல் இயக்குநர், நிலஅளவை மற்றும் நிலவரித்திட்டம், சென்னை – 5.

- அவர்களுக்கு பணிந்தனுப்பப்படுகிறது.

நகல் மண்டல துணை இயக்குநர், நிலஅளவை பதிவேடுகள் துறை, கோவை – 18.

- அவர்களுக்கு பணிந்தனுப்பப்படுகிறது.

நகல் நிர்வாக அலுவலர்.

நகல் கண்காணிப்பாளர் 1, 2

நகல் "அ3" "அ5" இருக்கைக்கு

உபரி 2